# ஓப்ஸ் பெர்சே: பல்வேறு குற்றங்களுக்காக
# 68 அபராதச் சீட்டுகள் வெளியிடப்பட்டன
## - கோலாலம்பூர் மாநகர் மன்றம்



நமது நிருபர்

கோலாலம்பூர், மே 30-

தாமான் கொனாட், கிழக்கு-மேற்கு இணைப்பு நெடுஞ்சாலையில் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட 2ஆவது ஓப்ஸ் பெர்சே சோதனை நடவடிக்கையில் பல்வேறு குற்றங்களுக்காக 68 அபராதச் சீட்டுகள் வெளியிடப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது.

தேசிய போலீஸ் படை, திடக்கழிவு நிர்வாகம் மற்றும் பொதுத் தூய்மை அமைப்பு (எஸ்.டபள்யூ.கார்பரேஷன்), சாலைப் போக்குவரத்துத் துறை (ஜே.பி.ஜே.) ஆகியவையும் இதில் ஒன்றிணைந்து செயல்பட்டன.

98 வாகனங்கள் சோதனையிடப்பட்ட இதில் மேற்கொண்ட அமலாக்க நடவடிக்கைகள் பல்வேறு குற்றங்கள் புரிந்த சொந்த, வர்த்தக வாகனங்களை உட்படுத்தியதாகும். இதனைத் தொடர்ந்து 1997 சரக்கு போக்குவரத்துக்கான சிறு சட்டம் மற்றும் 1974 சாலைகள், வடிகால் மற்றும் கட்டிடங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் பல்வேறு குற்றங்களுக்காக 21 அபராதச் சீட்டுகளை மாநகர் மன்றம் வெளியிட்டது.

இதே போல் தேசிய போலீஸ் படை 21 அபராதச் சீட்டுகள், ஜே.பி.ஜே. (23), எஸ்.டபள்யூ.கார்ப்பரேஷன் 3 அபராதச் சீட்டுகள் என பல்வேறு போக்குவரத்துக் குற்றங்களுக்காக வெளியிடப்பட்டன.

இச்சிறப்பு நடவடிக்கை எஸ்.ஓ.பி. மற்றும் மாநகர் மன்றம், இதர அமலாக்க நிறுவனங்கள் அமல்படுத்திய சட்டப் பிரிவுகளின்படி மேற்கொள்ளப்பட்டதால் இதன் பிறகு இந்நடவடிக்கை இதர பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.

